

இராணிப்பேட்டைஹாக்கிஅசோசியேசன்சார்பாக, இராணிப்பேட்டை மாவட்டம், தென்கடப்பந்தாங்கல்கிராமம், பொறியியல் கல்லூரி வளாகத்தில் மாவட்ட அளவிலான போட்டி நடைபெற்றது. இதில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்து வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகளை வழங்கினார். இதில் ஆர்.வினோத் காந்தி, ஜெ.எல்ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ, சேகர் , மைக்கேல் செந்தில், ராஜாகுமார். எஸ்.வினோத் , பி.எல்.டி.சிவா, பிரேம் ஆனந்த் மற்றும் க.சுந்தரம், சேஷாவெங்கட், ஜெயந்தி திருமூர்த்தி, எம்.சண்முகம், து.தில்லை, சுஜாதா வினோத், தியாகராஜன், டி.குமார் அக்பர் ஷரீப் டான்போஸ்கோ , பி.யுவராஜ் , பாலாஜி மற்றும் வாலாஜா நகர ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### தென்காசி குற்றாலம் சாரல் திருவிழாவை முன்னிட்டு

# ஐந்தருவி சுற்றுச் சூழல் பூங்காவில் தோட்டக்கலை திருவிழா மலர் கண்காட்சி!

## மருத்துவர் ராணிஸ்ரீகுமார் எம்.பி. - பழனி நாடார் பங்கேற்பு!

தென்காசி, ஆக. 20 -

தென்காசி மாவட்டம் தென்காசி குற்றாலம் சாரல் திருவிழாவை முன்னிட்டு ஐந்தருவி சுற்றுச்சூழல் பூங்காவில் தோட்டக்கலைதுறை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் தோட்டக்கலை திருவிழா மலர்கண்காட்சியை மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர்,தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணிஸ்ரீ குமார், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் ரா.சீனிவாசன் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

தென்காசி மாவட்டம் குற்றாலம் பேரூராட்சி கலைவாணர் அரங்கத்தில் குற்றாலம் சாரல் திருவிழாவினை மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவ ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தனர்.

தென்காசி மாவட்டம் குற்றாலம் பேரூராட்சி கலைவாணர் அரங்கத்தில் 16.08.2024 முதல் 19.08.2022 வரை ஆகிய 4 நாட்கள் நடைபெறுகிறது. குற்றாலம் சாரல் திருவிழாவின் துவக்க விழா 16.08.2024 வெள்ளிக்கிழமை மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீகுமார் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனிநாடார் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன்திருமலை குமார்,மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ரா.சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்ததாவது.

தென்றல் தவழும் தென்காசி மாவட்டத்தில் குற்றாலம் கலைவாணர் அரங்கத்தில் நடைபெறும் சாரல் விழாவிற்கு வருகை தந்திருக்கும் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்கும், அனைத்து அரசு அலுவலர்களுக்கும், பொதுமக்களுக்கும், சுற்றுலா பயணிகளுக்கும் இனிய காலை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.சாரல் திருவிழா நமது மாவட்டத்தில் ஒரு முக்கிய பெருவிழா. இதில் அனைத்து தரப்பு மக்களும் கலந்து கொள்ள வேண்டும்.பல்வேறு கலை நிகழ்ச்சிகளும்,பல்வேறு விளையாட்டு போட்டிகளும் நான்கு நாட்கள் நடைபெற உள்ளது. இதில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும்.நமது மாவட்டத்தில் சுற்றுலாவை மேம்படுத்துவற்காக மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகிறது.அதன் ஒரு பகுதியாக I LOVE COURTAL LAM Selfie point அமைக்கப்பட்டுள்ளது.நமது மாவட்டத்திற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளை நமது விருந்தினர்கள் போல் மரியாதையுடனும்,அன்புடனும் நடத்த அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். சாரல் விழா நிகழ்ச்சிக்காக அரும்பாடுபட்ட அனைத்து அலுவலர்களுக்கும், நன்கொடை வழங்கிய நல் உள்ளங்களுக்கும் எனது பாராட்டுகளையும்,நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீகுமார் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தென்காசி மாவட்டத்திற்கென்று பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். தென்காசி மாவட்டம் குற்றாலம் இயற்கை சூழ்ந்த இடம். இங்கு பழைய குற்றால அருவி, புதிய குற்றால அருவி மற்றும் ஐந்தருவி, புலியருவி, பழத்தோட்ட அருவி என பல்வேறு அருவிகள் நிறைந்து காணப்படுகின்றன. குற்றாலம் இயற்கையாக அமைந்துள்ள அருவி.இங்கு குளிப்பதால் பல்வேறு நோய்கள் தீர்கின்றன.இங்கு வரும் மக்கள் சந்தோசமாகவும்,மன நிம்மதியுடன் குற்றாலச்சாரலினை அனுபவித்து விட்டுச் செல்கின்றனர்.இங்கு குற்றாலச்சாரல் விழா இன்று முதல் நான்கு நாட்கள் நடைபெறுகின்றது. மக்கள் அனைவரும் சாரல் திருவிழாவில் கலந்து கொண்டு மகிழ்ச்சியுடனும், மனநிறைவுடனும் வந்து செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

முதல் நாள் துவக்க விழா நிகழ்ச்சியாக மங்கள இசையுடன், கொழு கொழு குழந்தைகள் போட்டிகளும்,இடைகால் மற்றும் சிந்தாமணி பள்ளி மாணவ, மாணவியர்களின் பல்சுவை நிகழ்ச்சியும், பொள்ளாச்சி கண்ணாடி வெண்புறா குழுவினரின் ஜிக்காட்டம் நிகழ்ச்சி, நெல்லை ஸ்ரீவித்யா நாட்டிய மன்றத்தினரின் பரத நாட்டிய நிகழ்ச்சி, சிவகாசி வெண்மணி குழுவினரின் கிராமிய கலை நிகழ்ச்சி, கலைசுடர் மணி நாமக்கல் வே.பிரவு வழங்கும் கிளாரினட் இசை நிகழ்ச்சி, சன் டிவி புகழ் கவிதா ஜவஹர் அவர்கள் தலைமையிலான மாபெரும் சிந்தனை பட்டிமன்றம்,கேரளா மாநில கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் விஜய் டிவி விஷ்ணுசரண் கலந்து கொள்ளும் தூத்துக்குடி யாழிசை ஆர்கெஸ்ட்ரா வழங்கும் திரைப்பட மெல்லிசை மற்றும் தென்காசி மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் குடும்ப வன்முறை, குழந்தைத் திருமணம், பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கான பாதுகாப்பு குறித்த காணொளி காட்சி ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

மேலும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணிகள் மாவட்ட திட்ட அலுவலகம் சார்பில் கொழுகொழு குழந்தை போட்டி நடைபெற்றது.62 குழந்தைகள் போட்டியில் பங்கேற்றனர்.இதில் 9 முதல் 12 மாத குழந்தைகளின் எடை,உயரம் ஊட்டச்சத்து நிலை, வளர்ச்சி படிநிலைகள் ஆகியவற்றின் அடிப்படையில் மருத்துவர்.சரவணன் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மேலகரம் மற்றும் மருத்துவர் பாண்டித்துரை நேரடி பரிசோதனையிலும் தேர்வான குழந்தைகளில் முதல் பரிசு ரூபாய் 5,000 இலத்தூரை சேர்ந்த மகேஷ் பிச்சையா தம்பதியினரின மகளான இன்சிகாபானுவும்,2வது பரிசு ரூபாய் 3,000,சாம்பவர் வடகரையைச் சேர்ந்த ராஜாமுத்துச்செல்வி அவர்களின் மகனான காளைராஜாவிற்கும்,3ம் பரிசு ரூபாய்.2,000சாம்பவர்வடகரையை சேர்ந்த சொரிமுத்து ஜெயகிருஷ்ண லெட்சுமி அவர்களின் மகளானஜெயவிசாகாவிற்கும் வழங்கப்பட்டது.

நிகழ்வில்மாவட்ட வன அலுவலர் இரா.முருகன், மாவட்ட வருவாய் அலுவலர்சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோனி பெர்னாண்டோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அமிர்தலிங்கம், வருவாய் கோட்டாட்சியர் லாவண்யா, உதவி இயக்குநர் பேரூராட்சிகள் அ.வில்லியம் ஜேசுதாஸ், உதவி இயக்குநர் (மண்டல கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி)

வ.கோபாலகிருஷ்ணன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் உதயகிருஷ்ணன், குற்றாலம் பேரூராட்சி செயல் அலுவலர் சுஷ்மா மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

---

### வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

# கதிர் ஆனந்த் எம்.பி. வாக்காளர்களுக்கு இன்று நன்றி தெரிவிக்கிறார்!



மதச்சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ள கதிர் ஆனந்த் எம்.பி. (20.08.2024, செவ்வாய்க்கிழமை) கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்.

**குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி மாதனூர் ஒன்றியம்**

| கலந்து கொள்ளும் ஊராட்சிகள் | இடம் | நேரம் |
|---|---|---|
| 1. சோமலாபுரம் | சோமலாபுர | காலை 8.00 மணி |
| 2. பெரிய கொம்மேஸ்வரம் | பள்ளி அருகில் | 8.15 மணி |
| 3, சாத்தம்பாக்கம் | கோயில் அருகில் | 8.30 மணி |
| 4, அயித்தம்பட்டு | பஸ் நிலையம் | 8.45 மணி |
| 5, தேவலாபுரம் | பஸ் நிலையம் | 9.00 மணி |
| 6. துத்திப்பட்டு | கோயில் அருகில் | 9.15 மணி |
| 7. பெரியவரிகம் | பஸ் நிலையம் | 9,30 மணி |
| 8. சின்னவரிகம் | பஸ் நிலையம் | 9.45 மணி |
| 9. கைலாசகிரி | கடாம்பூர் | 10.00 மணி |
| 10. நரியம்பட்டு | பஸ் நிலையம் | 10.15 மணி |

**குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி பேர்ணாம்பட்டு கிழக்கு ஒன்றியம்**

| | | |
|---|---|---|
| 1. இராஜக்கல் | பஸ் நிலையம் | 10.30 மணி |
| 2. அழிஞ்சிகுப்பம் | பஸ் நிலையம் | 10.45 மணி |
| 3. எம்.பி.குப்பம் சொக்கரிச்சிகுப்பம் | கெங்கையம்மன் கோயில் அருகில் (எம்.வி.குப்பம்) | 11.00 மணி |
| 4. மேல்பட்டி | காமராஜர் சிலை அருகில் | 11.15 மணி |
| 5. செண்டத்தூர் | மேல்செண்டத்தூர் | 11.30 மணி |
| 6. கார்கூர் பல்லலகுப்பம் | பல்லலகுப்பம் | 11.45 மணி |
| 7. பொகளூர் | பொகளூர் | பகல் 12.00 மணி |
| 8. பரவக்கல் | சின்னபரவக்கல் | பகல் 3.00 மணி |
| 9. மொரசப்பள்ளி | பஸ் நிலையம் | பகல் 3.15 மணி |
| 10 டி.டி. மோட்டூர் | கமலாபுரம் | மாலை 3.30 மணி |
| 11. ஏரிகுத்தி கொத்தப்பள்ளி | ஏரிகுத்தி | மாலை 3.45 மணி |

**குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி பேர்ணாம்பட்டு மேற்கு ஒன்றியம்**

| | | |
|---|---|---|
| 1. சாத்கர் | சாத்கர் | மாலை 4.00 மணி |
| 2. குண்டலப்பள்ளி | கோக்கலூர் | மாலை 4.15 மணி |
| 3. எருக்கம்பட்டு | எருக்கம்பட்டு | மாலை 4.30 மணி |
| 4. பத்தலப்பள்ளி | பத்தலப்பள்ளி | மாலை 4.45 மணி |
| 5. சின்ன தாமல்செருவு | பக்காலப்பள்ளி | மாலை 5.00 மணி |
| 6. மசிகம் | மசிகம் | மாலை 5.15 மணி |
| 7. பாலூர் | மேல்பாலூர் | மாலை 5.30 மணி |
| 8. கொத்தூர் | பஸ் நிலையம் | மாலை 5.45 மணி |
| 9. மாச்சம்பட்டு | பஸ் நிலையம் | மாலை 6.00 மணி |

---



மதுரை மாவட்டம் யா.ஒத்தக்கடையில் வரும் செப்டம்பர் 6ஆம் தேதி இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பல்லாயிரக்கணக்கானோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளதை முன்னிட்டு, விழாவிற்கான கால்கோள் நடும் நிகழ்வினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல் மற்றும் கழக நிர்வாகிகள், அதிகாரிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.

### வேளாண்மை - நீர்வளம் சார்ந்த தொலைநோக்குப் பார்வை தி.மு.க. அரசுக்கு எப்போதுமே உண்டு!

# அத்திக்கடவு - அவிநாசி திட்டம் - அதில் ஒரு மைல்கல்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஆக. 20 -

வேளாண்மை - நீர்வளம் சார்ந்த தொலைநோக்குப் பார்வை தி.மு.க. அரசுக்கு எப்போதுமே உண்டு. அதில் ஒரு மைல்கல்லாக அத்திக்கடவு - அவிநாசி திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

இது குறித்து 19.8.2024 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:



தினகரன்
ஆகஸ்ட் 19, 2024 திங்கட்கிழமை
நீர்வளம் காப்போம்
தமிழ்நாட்டின் முதுகெலும்பாக திகழும் விவசாயிகளின் மேம்பாட்டிற்கு திட்டங்களை தீட்டி, அதை செயல்படுத்துவதில் திமுக அரசை என்றுமே மிஞ்சவே முடியாது. புதியதாக அணைகள், கால்வாய்கள் என வேளாண்மையை வளப்படுத்தும் எந்தவொரு திட்டம் என்றாலும் அதில் திமுக அரசின் பங்கு இல்லாமல் இருக்காது. பெரும் பாலான திட்டங்களை தொடங்கி வைப்பதும், முடிப்பதும் திமுக அரசின் சிறப்பான பணிகளாகவே கருதப்படுகின்றன. தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான நீர் ஆதாரங்கள், இன்று மக்கள் நலம் நாடும் திமுக ஆட்சியின் பெயர் சொல்வதிலேயே பெருமைப்படுகின்றன. அந்த வகையில் தற்போது ஈரோடு, திருப்பூர், கோவை மாவட்டங்கள் பயன்பெறும் வகையில் ₹1916 கோடியில் அத்திகடவு - அவிநாசி திட்டமும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டின் முதுகெலும்பாக திகழும் விவசாயிகளின் திட்டங்களை தீட்டி, அதை செயல்படுத்துவதில் தி.மு.க. அரசை என் றுமே மிஞ்சவே முடியாது. புதியதாக அணைகள், கால்வாய்கள் என வேளாண்மையை வளப்படுத்தும் எந்தவொரு திட்டம் என்றாலும் அதில் தி.மு.க. அரசின் பங்கு இல்லாமல் இருக்காது. பெரும் பாலான திட்டங்களை தொடங்கி வைப்பதும், முடிப்பதும் திமுக அரசின் சிறப்பான பணிகளாகவே கருதப்படுகின்றன. தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான நீர் ஆதாரங்கள், இன்று மக்கள் நலம் நாடும் தி.மு.க. ஆட்சியின் பெயர் சொல்வதிலேயே பெருமைப்படுகின்றன. அந்த வகையில் தற்போது ஈரோடு, திருப்பூர், கோவை மாவட்டங்கள் பயன்பெறும் வகையில் ரூ.71916 கோடியில் அத்திகடவு - அவிநாசி திட்டமும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இம்மூன்று மாவட்ட மக்களின் நீண்ட கால கனவு திட்டமாக கருதப்படும் அத்திகடவு - அவிநாசி திட்டத்தின் மூலம் 50 லட்சம் மக்கள் பயன்பெற உள்ளனர். பவானி ஆற்றில் காளிங்கராயன் அணைக்கட்டின் கீழ்புறத்தில் இருந்து வெளி யேறும் உபரிநீரை, வினாடிக்கு 250 கன அடி வீதம், 70 நாட்களுக்கு நீரேற்றம் செய்து, ஈரோடு, திருப் பூர், கோவை மாவட்டங்களில் வறட்சியால் பாதிக் கப்பட்ட பகுதிகளுக்கு கொண்டு செல்வதே இதன் நோக்கமாகும். இதற்காக 1065 கி.மீ தூரத்திற்கு குழாய்களும் பதிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 24 ஆயிரத்து 468 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. நீர்வளத்துறையின் 32 ஏரிகள், ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட 42 ஏரிகள், 971 குளம், குட்டைகள் நீர்வளம் பெற உள்ளன.

கண்ணை இமை காப்பது போல், இத்திட்டத்தை தொடக்கம் முதலே கண்காணித்து நிறைவேற்றிய பெருமை திராவிட மாடல் அரசையே சாரும். முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி, இத் திட்டத்தை 1972ம் ஆண்டிலே நிறைவேற்றிட, தேவையான முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால் ஆட்சி மாற்றம் அதற்கு வழிவிடவில்லை. அதை தொடர்ந்து 1996 - 2001ம் ஆண்டு கால ஆட் சியிலும், இத்திட்டத்திற்கான மறு ஆய்வுகளை மேற்கொண்டு, செயல்படுத்த ஒப்புதல் வழங்கினார். அதைத் தொடர்ந்து நடந்த ஆட்சி மாற்றத்தால், பணிகளில் சுணக்கம் ஏற்பட்டது. கலைஞர் விட்டுச் சென்ற பணிகளை கண்ணும் கருத்துமாக சிரமேற் கொண்டு பணியாற்றும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அரிய முயற்சியால் இப்போது ரூ.71916 கோடியில் அத்திகடவு - அவிநாசி திட்டம் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

தங்களது நீண்ட கால கனவு நிறைவேறிய நிலையில், கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சியில் திளைக்கின்றனர். 65 ஆண்டு கால கனவை நனவாக்கிய சுக்கு விவசாயிகளும், பொதுமக்களும் நன்றி தெரிவித்து வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் பவானி ஆற்றின் உபரி நீர், முதல் குளமான மாந்தம்குளத்திற்கு சென்றபோது, விவசாயிகள் ஆர்ப்பரித்து அதை வரவேற்றனர். தமிழகத்தை பொறுத்த வரை இத்திட்டம் மட்டுமல்ல, தாமிர பரணி - கருமேனியாறு - நம்பியாறு இணைப்பு திட்டத்தை நிறைவேற்றியதும் திமுக அரசுதான். 2009ம் ஆண்டு இப்பணிகளை தொடக்கிய கையோடு, இன்று நெல்லை, தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளின் கனவை நனவாக்கிய பெருமையும் தி.மு.க. அரசுக்கே உண்டு.

வேளாண்மைக்கு என தனி பட்ஜெட் உருவாக் கியதும், டிஜிட்டல் விவசாயத்தை அறிமுகப்படுத் தியதும் திராவிட மாடல் அரசுதான் என்பதில் பெருமை கொள்வோம். வேளாண்மை, நீர்வளம் சார்ந்த தொலை நோக்கு பார்வை எப்போதுமே தி.மு.க. அரசுக்கு உண்டு. அத்திகடவு - அவிநாசி திட்டம் அதில் ஒரு மைல் கல் எனலாம்.

இவ்வாறு ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# அ. இரகுமான்கான்

### ஆகஸ்ட் 20 (2020)



மாணவப் பருவத்திலேயே தேர்தல் பிரச்சாரம் செய்ததோடு, 1965ஆம் ஆண்டு இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றபோது, கல்லூரி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டைமீறி, போராட்டத்தில் ஈடுபட்டார்.

மதுரையில் கறுப்புக் கொடிப் போராட்டம் நடைபெற்றபோது, இவர்மீது அ.தி.மு.க. அரசால் பொய்வழக்குப் போடப்பட்டு, இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் சென்னை உயர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

கழகம் நடத்திய போராட்டங்கள் அனைத்திலும் பங்கு கொண்டு வேலூர், திருச்சி சிறைகளில் இருந்த இவர், இலங்கைத் பிரச்சினைக்காக தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்று, அவருடன் சென்னை மத்திய சிறையில் சிறைவாசம் அனுபவித்தவர்.

1977ல் தொடங்கி ஐந்து முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், 1996ல் தொழிலாளர் நலத்துறை அமைச்சராகவும் – 2006ல் தமிழக அரசின் சிறுசேமிப்புக் குழுத் துணைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

கழகத்தின் அமைப்புச் செயலாளர், தணிக்கைக்குழு உறுப்பினர், தீர்மானக்குழுச் செயலாளர், செய்தித் தொடர்பாளர் ஆகிய பொறுப்புக்களை ஏற்று கழகப் பணியாற்றிய இவருக்கு, 2012ல் தலைமைக் கழகத்தின் சார்பில் ‘அண்ணா விருதினை’ முத்தமிழறிஞர் கலைஞர் வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.